திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, ஒன்றியங்களே உள்ளாட்சிச் சாலைகளைப் பராமரிக்கும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஊராட்சி சாலைகளை ஒன்றியங்களுக்கு மாற்றக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அதை அனுப்பியிருக்கிறார்கள், அதைப் பரிசீலிப்ப தற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிந்துரை அனுப்பப்பட்டிருந்தால் நிதி நிலைமையை ஆராய்ந்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

உணவு விடுதிகளில் தீண்டாமை மேற்கொள்ளுதல்.

* வினா எண். 288—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடைளியப்பாரா—

திருச்சி மாவட்டம், முசிரி வட்டம், மகாதேவியில் உள்ள டீக்கடைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனி தகரக் குவளை வைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திருச்சி மாவட்டம், முசிரி வட்டம், மகாதேவி கிராமத்தில் உள்ள தேநீர்விடுதிகளில் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு தனித்தகரக் குவளைகள் வைக்கப்படும் பழக்கம் ஏதும் இல்லை என்று விசாரணையில் தெரிய வருகிறது. மேலும் அங்கு அப்படிப்பட்ட தவறுகள் நடப்பதாக அரசுக்குப் புகார்கள் ஏதும் வரவில்லை.

[முற்பகல் 9-50]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, மகாதேவிக்கு நல்ல வரலாறு உண்டு அந்த ஊரைப்பற்றி. அங்கு இல்லை என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தக் கேள்வி முறையாக காவல்துறைக்கு, போலீஸ் டிபார்ட்மெண்டுக்குச் சென்றிருக்க வேண்டும். அவர்கள்தான் முறையாக ஆய்வு செய்வார்கள். அரிசன நலத்துறையில் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற வர்களுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாமல்

போய்விட்டது. இது முறையாகக் காவல்துறைக்குப் போயிருக்க வேண்டும். மகாதேவியிலிருந்து ரெப்ரசண்டேஷன் வந்திருக்கிறது. முதல்வரைப் பார்ப்பதற்காக சைக்கிளில் ஒருவர் வந்து, பாவம் அவரைப் பார்க்க முடியாமல் அவர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பார்த்துக் கோரிக்கையைச் சொல்லி விட்டுச் சென்றார். ஆகவே இந்தக் குறை இல்லை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு வேறு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் கொடுக்கலாம், முதலிலேயே இவ்வளவு பெரிய கேள்வியாகப் போடுகிறீர்களே.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், காவல்துறைக்குச் செல்ல வேண்டிய கேள்வி அரிசன நலத்துறைக்கு எப்படி வந்தது என்று கேட்டார்கள். இந்தத் துறை தனி காவல் படையை நிறுவி அதைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறது. அந்தக் காவல்படை இதுபோன்ற குற்றங்களை விசாரிக்கின்ற பொறுப்பில் இருக்கிறது. ஆகவேதான் அரிசன நலத்துறைக்கு இந்தக் கேள்வி வந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

* வினா எண் 289—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள கான்சாபுரம், கூமாபட்டி, கட்டயதேவன்பட்டி, குன்னூர், ஊடனேரி, நத்தம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள உணவு விடுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக பிளேட் கொடுத்து உணவு விடுதிக்கு வெளியே இருந்து உணவு அருந்தச் செய்வது அரசு கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.